நாள்: 19.08.2026

**ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)
சிவபுரம், புதுக்கோட்டை – 622 422

## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு - மனிதச் சங்கிலி

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் போதைப் பொருள் தடுப்புக் குழு, உயிர் நுட்பவியல் துறை மற்றும் கணினி பயன்பாட்டியியல் இணைந்து போதைப் பொருட்கள் அற்ற ஆரோக்கியமானச் சமுதாயத்தைப் படைக்கும் நோக்கில், பிரம்மாண்டமான விழிப்புணர்வு **"மனிதச் சங்கிலி" (Human Chain)** நிகழ்வு 18.08.2026 அன்று கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடந்தது.

இந்நிகழ்வினைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அவர், போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வை மாணவர்களிடம் ஆழமாகப் பதிய வைப்பதும், சமுதாயப் பொறுப்புணர்வுடன் செயல்பட அவர்களை ஊக்குவிப்பதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

இந்த மனிதச் சங்கிலி நிகழ்வில் உயிர் அறிவியல் துறையை சேர்ந்த 300 மாணவர்கள் மிகுந்த எழுச்சியுடன் பங்கேற்றனர். மாணவர்கள் தங்களின் கைகளில், **"போதைக்கு அடிமையாவதைத் தவிர்ப்போம் - வாழ்வை நேசிப்போம்" (Say No to Drugs – Say Yes to Life), "போதை இல்லா உலகம் - ஆரோக்கியமான தேசம்"** போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, போதைப் பழக்கத்திற்கு எதிரான தங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். மேலும் Say No to Drugs – என்னும் எழுத்து வடிவிலான மனிதச் சங்கிலியில் நின்று மாணவர்கள் **வான்வழிப் படப்பிடிப்பு (Drone Camera)** மூலம் படம் பிடித்து போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை ஆழமாக பதிவு செய்தனர்.

இத்தகைய கூட்டு முயற்சி, மாணவர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதுடன், போதைப் பொருள்களுக்கு எதிரான சமூக அக்கறையையும் வலுப்படுத்துகிறது. நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்த இந்த மனிதச் சங்கிலியை ஒருங்கிணைத்த போதைப் பொருள் தடுப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் G.மணிகண்டன் மற்றும் உயிர் நுட்பவியல் துறை தலைவர், பேராசிரியர்கள், பங்கேற்ற மாணவர்கள் அனைவரையும் கல்லூரி நிர்வாகம் பாராட்டி ஊக்கப்படுத்தியது.

முதல்வர்